தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 14, சுக்ல— திருவள்ளுவர் ஆண்டு 2020.

1989 அக்டோபர் 30, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் 10-00 மணி யளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.''

நேற்றுச் சிறப்போடு இருந்தவன் ஒருவன், இன்று இல்லாமல் மறைந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமையைப் பெருமையாகக் கொண்டு விளங்குகின்றது இந்த உலகம்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கல் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றத் தின் கீழ்க்கண்ட முன்னாள் உறுப்பினர்கள் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்:—

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : மறைந்த நாள் 25-5-1989. இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தொகுதியில் 1958 முதல் 1962 வரை உறுப்பினராக இருந்தவர்.

திரு. பி. ஆர். இராமானுஜலு செட்டியார் : 10-6-1989 அன்று மறைந்திருக்கிறார். திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் செய்யாறு பொது கிராமப்புறம் தொகுதியில் 1946 முதல் 1952 வரை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

திரு. வீ. அர்ச்சுனன் : மறைந்த நாள் 23-6-1989. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதியில் 1977 முதல் 1980 வரை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

D 2 53-240—1

திரு. வி. வைரவத்தேவர்: மறைந்த நாள் 10-7-1989. தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் தொகுதியில் 1956 முதல் 1957 வரை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

திரு. மு. அனந்தன்: மறைந்த நாள் 10-7-1989. தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி (தனித்) தொகுதியில் 1957 முதல் 1962 வரை மற்றும் ரிஷிவந்தியம் (செடியூல்டு வகுப்பு) தொகுதியில் 1967 முதல் 1971 வரை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

திரு. துரை கலியமூர்த்தி: மறைந்த நாள் 25-8-1989. தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் தொகுதியில் 1977 முதல் 1980 வரை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

திரு. ஜி. கோவிந்தன்: மறைந்த நாள் 25-8-1989. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் 1952 முதல் 1957 வரை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

திரு. ப. பொன்னுரங்கம்: மறைந்த நாள் 13-10-1989. சென்னை மாநகரம், இராயபுரம் தொகுதியில் 1977 முதல் 1986 வரை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

திரு. கே. நாராயணசாமி முதலியார்: மறைந்த நாள் 13-9-1989. 1977 முதல் 1980 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், இந்த அவையில் சட்ட அமைச்சராகவும் இருந்திருக்கிறார்.

மறைந்த உறுப்பினர்கள் அனைவரும் இப்பேரவையில் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவினால் அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு மணித்துளித் மௌனமாக நின்றனர்).